# தரணி போற்றும் பழனி தைப்பூச திருவிழா

அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி முருகன் கோவிலில் நாளை 5-ம் தேதி தைப் பூசம் நடைபெற இருக்கிறது. பழனி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில் 2023-ம் ஆண்டு தைப்பூச திருவிழா 29.01.2023-ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி விழாவின் ஆறாம் நாளான 03-ம் தேதி திருக்கல்யாண வெள்ளித் தேரும், ஏழாம் நாளான 04-ம் தேதி திருத்தேர் வடம் பிடித்தலும், பத்தாம் நாளான 07-ம் தேதி தெப்பத் தேர் கொடி இறக்கத்துடன் திருவிழா நிறைவுபெறும்.



தைப்பூசம் தை மாதத்தில் பூச நட்சத்திரமும், பௌர்ண மியும் சேர்த்து வரும் நான்னாளே தைப்பூசமாக கொண்டாடப்படுகிறது. நட்சத்திர வரிசையில் பூசம் எட்டாவது நட்சத்திரமாகும். இவ்விழா முழு நிலவு பூச நட்சத்திரத்திற்கு வரும் நேரம் நடத்தப்படுகிறது. தைப்பூசத்தின் சிறப்பு இந்த நன்னாளானது முருகனுக்கு மிகவும் உகந்த நாளாக கருதப்படுகிறது. முருக பக்தர்கள் பலர் விரதம் இருந்து பல்வேறு வகையான காவடி எடுத்து, அலகு குத்தி முருகனை வழிபடுவது வழக்கம். பழனி தலங்கள் பழனி தலத்தின் மேற்கே 2 கல் தொலைவில் சண்முக நதி உள்ளது. இந்நதி புனித தீர்த்த நதியாக வழங்கப்படுகிறது. பாலாறு, வரத்தாறு, பொருந்தாலாறு, சுருளியாறு, கல்லாறு, பச்சையாறு எனப்படும் ஆறு நதிகள் இணைந்து சண்முக நதி என்னும் பெயருடன் விளங்குகிறது. திருஆவினன்குடி கோயில் வட கிழக்கில் சரவணப் பொய்கை அமைந்துள்ளது. பழனி ஊர்க் கோயிலாகிய பெரிய நாயகி அம்மன் கோவில் மேற்குப் பக்கத்தில் இருக்கிறது. பழனிக்கு வடக்காக 3 கல் தொலைவில் பெரியாவுடையார் கோவில் இருக்கிறது. பக்தர்களின் நல்வரவுகளுடன் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கந்த விலாஸ் பழனி**



**மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகிற 5-ம் தேதி வருகை தரும் அ.தி.மு.க. இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு சிறப்பாக வரவேற்பு அளிப்பது குறித்து மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் நிர்வாகிகளுக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட, பகுதி,வட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**



**பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவ சிலைக்கு அ.தி.மு.க. மாநில அமைப்பு செயலாளர் வி.மருதராஜ் தலைமையிலும், மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சி.எஸ். ராஜமோகன் முன்னிலையிலும், மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அருகில் மாவட்ட அபிராமி கூட்டுறவு மண்டகசாலை தலைவர் பாரதி முருகன், துணை தலைவர் வி.டி.ராஜன், பகுதி செயலாளர்கள் மோகன், சுப்பிரமணி, சேசு, முன்னாள் ஆவின் சேர்மன் திவான்பாட்சா, மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற துணைத் தலைவர் நெப்போலியன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.**

# பெரியகுளத்தில் அ.தி.மு.க சார்பில் அண்ணா நினைவு தினம் அனுசரிப்பு

**தேனி பிப் 4**

தேனி மாவட்டம், பெரிய குளத்தில் பேரறிஞர் அண்ணாவின் 54வது நினைவு தினத்தை முன்னிட்டு அவருடைய திருவுருவச்சிலைக்கு அதிமுகவினர் ஊர்வலமாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தேனி மாவட்டம், பெரிய குளத்தில் பேரறிஞர் அண்ணாவின் 54வது நினைவு தினத்தை முன்னிட்டு நகர செயலாளர் அப்துல்சமது, ஒன்றிய செயலாளர் செல்லமுத்து ஆகியோர் தலைமையில், நகர்மன்ற அதிமுக குழு தலைவர் சண்முகசுந்தரம் முன்னிலையில் அதிமுகவினர் பெரியகுளத்தில் உள்ள எம்.பி அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக மூன்றாந்தல், 18ம் ரஸ்தா, தண்டுபாளையம் மெயின் ரோடு, அம்பேத்கர் சிலை ஆகிய பகுதிகள் வழியாக சென்று பழைய பேரூந்து நிலையத்தை அடைந்தனர். அங்கு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனை தொடாந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கழக அமைப்;பு செயலாளர் மஞ்சுளாமுருகன், கழக விவசாய அணி பிரிவு துணை செயலாளர் ரெங்கராஜ், மாவட்ட துணை செயலாளர் தேனிமுருகேசன், தேனி நகர செயலாளர் வைகைகருப்புஜி, மாவட்ட பிரதிநிதி அன்பு பொதுக்குழு உறுப்பினர் கள்ளிப்பட்டி சிவக்குமார், மாவட்ட இளைஞரணி செயலாளர் முருகன், மாவட்ட மகளிரணி செயலாளர் பிரிதாநடேஷ், மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் முருகானந்தம் மற்றும் நகர, ஒன்றிய, நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



# பாதயாத்திரை பக்தர்களுக்கு ஒளிரும் குச்சி வழங்கல்



**ஒட்டன்சத்திரம் பிப்.4.**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் ஸ்ரீதரன் பழனி பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு சாலையில் பாதுகாப்பாக செல்லும் வகையில் ஒளிரும் குச்சிகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கினார் வாகன ஓட்டுனர்களுக்கு பாதயாத்திரை பக்தர்கள் அதிகமாக சாலையில் செல்வதால் வாகனத்தை கவனமாக எச்சரிக்கை செய்து அனுப்பினார். படம்.. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரத்தில் பாதயாத்திரை பக்தர்களுக்கு ஒளிரும் குச்சி மற்றும் விழிப்புணர்வு நோட்டீசை மோட்டார் வாகன ஆய்வாளர் ஸ்ரீதரன் வழங்கினார்.

# சாணார்பட்டி அருகே காளியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



**நத்தம், பிப், 4**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தொகுதி சாணார்பட்டி அருகே ஆண்டியபட்டியில் வினாயகர், முனியப்பன் காளியம்மன் ஆகிய கோவில்களில் கும்பாபிஷேக விழா நடந்தது.

இதையொட்டி கடந்த செவ்வாய்கிழமை அன்று கோ பூஜையுடன் விழா துவங்கியது. தொடர்ந்து யாகசாலை பூஜைகள் நடந்தது. பின்னர் காசி, ராமேஸ்வரம், அழகர்கோவில், திருமலைக்கேணி உள்ளிட்ட புனித ஸ்தலங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித தீர்த்தங்கள் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கோபுர உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டது. பின்னர் சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்தில் புனிதநீர் ஊற்றப்பட்டது.

இதில் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு புனித தீர்த்தமும், பூஜை மலர்களும் வழங்கப்பட்டது. தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

# பாலமேடு தங்கமுகம் சுவாமி கோவில் கும்பாபிஷேக விழா

**அலங்காநல்லூர், பிப்.4**

மதுரை மாவட்டம் பாலமேடு வடக்கு தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ தங்க முகம் சுவாமி கோவிலின் மகா கும்பாபிஷேக விழா நடந்தது. இதில் 2 கால யாக பூஜையுடன் கணபதி ஹோமம், மஹா சுதர்சன ஹோமம், விநாயகர் பூஜை, மஹா லக்ஷ்மி பூஜை, கோ பூஜை, உள்ளிட்ட பல்வேறு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.



தொடர்ந்து சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடாகி ராமேஸ்வரம், அழகர்கோவில், உள்ளிட்ட புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு கொண்டுவரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து பின் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வானத்தில் கருடன் வட்டமிட மேல தாளம் முழங்க கும்ப கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து சுவாமிக்கு அபிஷேகமும், தீபாரதனைகளும் நடந்தது.பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை பாலமேடு வடக்கு தெரு தங்கமுகம் பங்காளிகள் செய்திருந்தனர்.

### வத்தலக்குண்டுவில் அண்ணாவின் நினைவு நாள்

# ஓ.பி.எஸ் தரப்பினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்



**வத்தலகுண்டு பிப். 04-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பேருந்து நிலையம் அருகில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 54 வது நினைவு நாளை முன்னிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியின் பொருளாளரும் கழகத்தின் ஒருங்கிணைப்பாளரும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓ.பி.எஸ் வழிகாட்டுதலில் திண்டுக்கல் தெற்கு மாவட்ட செயலாளர் முனைவர் பா.வைகை பாலன் தலைமையில் வத்தலக்குண்டு வடக்கு ஒன்றிய செயலாளர் முனியாண்டி விலாஸ்இரத்தினம்.வடக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் குரு செந்தமிழ் பாண்டியன்.பொதுக்குழு உறுப்பினர் மணிபிள்ளை பட்டிவீரன்பட்டி பேரூர் கழக செயலாளர்எம்.சதிஷ்குமார். சேவுகம்பட்டி செயலாளர் எஸ் பாண்டி மாவட்ட மகளிர் அணி செயலாளர் புவனா. ஒன்றிய இணைச் செயலாளர் ஜெயா மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் பிச்சை . அண்ணா தொழிற்சங்க மாநில பொருளாளர் முருகானந்தம் விஜயராகவன் ஒன்றிய துணைச் செயலாளர் சங்கர் எம்.ஜி.ஆர் மன்ற ஒன்றிய செயலாளர் முத்தையா பழைய வத்தலக்குண்டு ஊராட்சி செயலாளர் மற்றும் வத்தலகுண்டு வடக்கு பகுதி ஒன்றிய கழக கழக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர்.

### டாக்டர் சரவணன் ஏற்பாட்டில் நடக்கும் விழா:

# மதுரை வரும் எடப்பாடிக்கு எழுச்சிமிகு வரவேற்பு

### ஆர். பி. உதயகுமார் பேட்டி



**மதுரை, பிப். 04-**

டாக்டர் சரவணன் ஏற்பாட்டில் மதுரையில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சேலத்தில் இருந்து சாலை மார்க்கமாக மதுரைக்கு வருகை தரும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு எழுச்சி மிகு வரவேற்பு அளிக்கப்பட உள்ளதாக முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் தெரிவித்தார்.

மதுரை ரிங் ரோடு கருப்புசாமி கோயில் அருகே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சரவணன் ஏற்பாட்டில் பத்தாயிரம் எடப்பாடியார் தலைமையேற்று, இணையும் விழா நடைபெறும் இடத்தினை முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நேற்று ஆய்வு செய்தார். அவருடன் முன்னாள் எம்.எல்.ஏ. டாக்டர் சரவணன், மாநில எம்.ஜி.ஆர். இளைஞர் அணி இணை செயலாளர் ஏ.கே.பி. சிவசுப்பிரமணியன், பாண்டி செல்வம் ஆகியோர் உடன் இருந்தனர்

அதை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் கூறியதாவது,

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தென் மாவட்ட மக்களின் வேண்டுகோளை ஏற்று மதுரை, திண்டுக்கல், பழனி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கு வருகை புரிந்தார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் கட்சித் தொண்டர்கள் எழுச்சிமிகு வரவேற்பை அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து வருகின்ற 5-ம் தேதி தைப்பூசம் அன்று தொண்டர்களின் வேண்டுகோளை ஏற்று மதுரை, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்க சேலத்தில் இருந்து சாலை மார்க்கமாக எடப்பாடியார் வருகை தரவுள்ளார்.

நாளை காலை 9 மணிக்கு ரிங் ரோடு வலையங்குளம் அருகே உள்ள கருப்பசாமி கோவில் அருகே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சரவணன் ஏற்பாட்டில் பத்தாயிரம் பேர் எடப்பாடியார் சீரிய தலைமை ஏற்று, அ.தி.மு.க.வில் இணையும் மாபெரும் விழா நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும் எடப்பாடியாருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பரமக்குடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்தையாவின் இல்ல திருமண விழாவை நடத்தி வைக்க பரமக்குடிக்கு சாலை மார்க்கமாக எடப்பாடியார் செல்கிறார் .அங்கு 5 முனை ரோடு அருகே ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் எம்.ஏ. முனியசாமி தலைமையில் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### தனது பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தராததால்

# ராஜினாமா செய்யப் போவதாக அ.தி.மு.க பெண் கவுன்சிலர் மின்னல்கொடி அறிவிப்பு

### திருமங்கலம் யூனியன் கூட்டத்தில் பரபரப்பு



**திருமங்கலம். பிப்.04.**

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தனது கவுன்சில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏதும் செய்து தராததால் தன்னுடைய ஒன்றிய கவுன்சிலர் பதவியை ராஜினாமா செய்ய போவதாக அ.தி.மு.க பெண் கவுன்சிலர் மின்னல் கொடி ஆண்டிச்சாமி அறிவித்ததால் திருமங்கலம் யூனியன் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கினில், நேற்று ஒன்றிய கவுன்சில் கூட்டம் நடைபெற்றது.இந்த கூட்டத்திற்கு ஒன்றிய தலைவர் ஜெ.லதா ஜெகன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் வளர்மதி அன்பழகன் முன்னிலை வகித்தார்.ஊராட்சி ஒன்றிய வளர்ச்சி வளர்ச்சி அலுவலர்கள் சங்கர் கைலாசம், இளங்கோ, பொறியாளர் மாயன் உட்பட அனைத்து அலுவலர்களும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டம் துவங்கியவுடன் வரவு செலவு கணக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து கவுன்சிலர் கரடிக்கல் ஆண்டிச்சாமி பேசுகையில்: மக்கள் நலத்திட்ட பணிகளை பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் கவுன்சிலர்களுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். இதனைத் தொடர்ந்து வாகைகுளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒன்றிய கவுன்சிலர் மின்னல் கொடி ஆண்டிச்சாமி பேசுகையில்: எனது ஒன்றிய கவுன்சிலர் பகுதிக்கு உட்பட்ட காண்டை பொன்னமங்கலம் வாகைகுளம் உள்ளிட்ட கிராமங்களுக்கு போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. பல முறை வலியுறுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் கவுன்சில் பக்கம் செல்ல முடியாத அளவிற்கு மக்கள் கேள்வி கேட்கின்றனர்.

எனவே ஒன்றிய கவுன்சிலர் பதவியை தான் ராஜினாமா செய்யப் போவதாக தெரிவித்தார். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அதிகாரிகள் சமரசத்தை தொடர்ந்து தனது வார்டில் நடைபெற வேண்டிய வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து மனு கொடுத்தார்.பின்னர் புளியங்குளம் கவுன்சிலர் ஓம் ஸ்ரீமுருகன் பேசுகையில்: சுகாதார பணிகள் நடைபெறும் போது தகவல் தெரிவிக்கப்படுவதில்லை.என தெரிவித்தார்.செக்கானூரணி ஆரம்ப சுகாதார நிலையம் இடியும் நிலையில் உள்ளது. அதனை இடித்து விட்டு புதிய கட்டிடங்கள் கட்டிட பரிந்துரை செய்ய வேண்டும் என தெரிவித்தார். மேலும் ஒன்றிய கவுன்சிலர் உச்சப்பட்டி செல்வம் கூறுகையில் தங்களுடைய பகுதிக்கு சாலை சீரமைப்பு வசதிகள் செய்து தராததால் பொதுமக்கள் அவதிப்படுவதாக தெரிவித்தார். மேலும் 4.2கோடி மதிப்பீட்டில் புதிதாக யூனியன் அலுவலகம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இடம் இல்லாததால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஜே ஜே எம் திட்டத்தில் யூனியனிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்படும். அதுபோல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்



**பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு மதுரை நெல்பேட்டையில் உள்ள அவரது உருவசிலைக்கு ஓ.பி.எஸ். அணி மாவட்ட செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஆர்.கோபாலகிருஷ்ணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட செயலாளர்கள் கே.முருகேசன், ஜி.ஆர்.ராமமூர்த்தி, ஏ.கே. முத்திருளாண்டி, வி.கே.எஸ்.மாரிச்சாமி, பி.எஸ்.கண்ணன், இளைஞரணி சரவணன், கனி, ஆனந்தகுமார், இ.பி.கிருஷ்ணமுர்த்தி, துதிதிருநாவுக்கரசு, சுகுமார், விஜயகுமார் வட்ட செயலாளர்கள் பீர் மைதீன், செல்லம்,ராக்கப்பன், போஸ்,செல்லமுத்து, சொக்கர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**



மலேசியா, கோலாலம்பூரில் சர்வதேச அளவில் 90 நாடுகளை சேர்ந்த 120-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட கருத்தரங்க நிகழ்வில் அணு ஆயுத போர் நிறுத்தம் மற்றும் உலக அமைதி குறித்த கருத்துகளை சிறப்பாக வெளிப்படுத்திய மதுரை மாவட்டத்தை சேர்ந்த மாணவி ஓவியா ஆனந்திக்கு சர்வதேச அமைப்பு சிறந்த பேச்சாளருக்கான விருதை வழங்கியது. அதனை தொடர்ந்து மதுரை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் அனீஷ்சேகரை சந்தித்து மாணவி வாழ்த்து பெற்றார்.

# வரி ஏய்ப்பு புகார்: தனியார் நிறுவன மரக்கடைகளில் வருமான வரித்துறையினர் அதிரடி சோதனை



**திருமங்கலம், பிப்.04**

திருமங்கலம் ,எழுமலை, விருதுநகர், செங்கோட்டை உள்ளிட்ட தமிழகத்தின் பகுதிகளில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான மரக்கடைகளில் வரி ஏய்ப்பு தொடர்பாக வருமான வரித்துறையினர் அதிரடி சோதனை மேற்கொண்டு கணக்கில் வராத பல லட்ச ரூபாய் பணம் மற்றும் முக்கிய ஆவணங்களை கைப்பற்றியுள்ளனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம்,எழுமலை, நாகமலைபுதுக்கோட்டை, விருதுநகர், செங்கோட்டை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தனியாருக்கு சொந்தமான சுரேஷ் மாஸ் மார்க்கெட்டிங் பிரைவேட் லிமிடெட் என்னும் நிறுவன ம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் வீடுகளுக்கு தேவையான கதவு, ஜன்னல் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் விற்பனை செய்து வருகிறது. மேலும் பர்மா, கொலம்பியா,நைஜீரியா உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து தேக்கு,வேங்கை, கோங்கு போன்ற மரங்களை கப்பல் மூலம் இறக்குமதி செய்து விற்பனை செய்து வருகின்றனர். இந் நிலையில் சம்பந்தப்பட்ட நிறுவனம் முறையாக வரி செலுத்தாமல் வரி ஏய்ப்பு செய்து வருவதாக வருமான வரி துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அந்த தகவலின் அடிப்படையில் நேற்று திருமங்கலம், கட்ராம்பட்டி, எழுமலை, விருதுநகர், செங்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் நிறுவனத்திற்கு சொந்தமான மரக் கடைகளில் ஒரே சமயத்தில் திடீரென நுழைந்த வருமானவரித் துறையினர் அதிரடி சோதனை மேற்கொண்டு வருகின்றனர். வெளிநாடுகளில் இருந்து வாங்கப்படும் மரங்களுக்கு முறையான கணக்கு காட்டப்பட்டுள்ளதா? நிறுவனத்திற்கு வரக்கூடிய வருமானத்திற்கு முறையாக வரி செலுத்தப்பட்டுள்ளதா? என 5 மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்று வருகிறது.இந்த சோதனையின் முடிவில் பல லட்ச ரூபாய் மதிப்பிலான ரொக்க பணம் மற்றும் வரி ஏய்ப்பு தொடர்பாக முக்கிய ஆவணங்களை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக கூறப்படுகிறது.

# சாயல்குடியில் பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டம்

**கடலாடி, பிப்.4-**

சாயல்குடியில் பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டம் அரசு தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது.

சாயல்குடி அரசு தொடக்கப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கூட்டம் நடந்த து. கூட்டத்திற்கு பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் கீதாரமணி முன்னிலை வகித்து பேசிய போது: மாணவர்கள் இருக்கைக்கு 'பெஞ்ச்' தமிழக அரசிடம் கேட்பதுஇ ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பு ஏற்பாடு இ பள்ளியில் மரக்கன்று வளர்த்தல் ஆகிய தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளோம். ஆண்டு விழா வருகிற 9ம் தேதி நடக்க இருக்கிறது. விழாவிற்கு பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும்இ என பேசினார். ஆசிரியர் மனோகரி மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு துணைத்தலைவர் சந்தியா உட்பட பலர் பங்கேற்றனர்.

# மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுக்கான நேரடி இலவச பயிற்சி வகுப்புகள்

## விருதுநகர் கலெக்டர் (பொ) ஜெ.ரவிகுமார் தகவல்

**விருதுநகர், பிப்.4**

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் *SSC MTS (MULTI TASKING NON TECHNICAL STAFF) / CENTRAL BOARD OF INDIRECT TAXES CUSTOMER – HAVILDAR / CENTRAL BUREAU OF NARCOTICS - HAVILDAR* தேர்விற்கு அறிவிக்கப்பட்டுள்ள சுமார் 11000-க்கும் மேற்பட்ட பணிக்காலியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ளது.

தேர்வு குறித்து மேலும் அறிந்து கொள்ள www.ssc.nic.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். வயது வரம்பு- 18 முதல் 25 வரை. 10ம் வகுப்பு கல்வித்தகுதியுடைய அனைவரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க கடைசி நாள் 17.02.2023.

இத்தேர்வுக்குரிய இலவச நேரடி பயிற்சி வகுப்புகள் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலம் 03.02.2023 அன்று முதல் நேரடியாக நடைபெறவுள்ளது.

இப்போட்டித்தேர்வுக்கு தேவையான அனைத்து புத்தகங்களும் மாவட்ட வேலைவாய்;ப்பு அலுவலக நூலகத்தில் பராமரிக்கப் பட்டு வருகிறது. இந்த இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை நேரில் அணுகலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு அலுவலக தொலைபேசி எண் 04562 - 293613 அல்லது studycirclevnr@gmail.com என்ற மின்னஞ்சலில் வேலை வாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) ஜெ.ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அருப்புக்கோட்டையில் அ.தி.மு.க. சார்பில் அண்ணா சிலைக்கு மாலையணிவிப்பு



**அருப்புக்கோட்டை, பிப்.4**

அருப்புக்கோட்டை நகர அ.தி.மு.க. சார்பாக அறிஞர் அண்ணாவின் 54 வது நினைவு நாள் அருப்புக்கோட்டை நகர செயலாளர் சத்திவேல் பாண்டியன் தலைமையில் பஜாரில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

,இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் வீரசுப்ரமணியன், அவைத்தலைவர் பம்பாய் மணி,பொருளாளர் செந்தமிழ்செல்வன், சிறுபான்மை பிரிவு மாவட்ட செயலாளர் சேரன் இஸ்மாயில், ஆவின் அன்சாரி தகவல் தொழில்நுட்பபிரிவு மாவட்ட செயலாளர் கருப்பசாமிபாண்டியன், கவுன்சிலர் இராமதிலகவதி மகளிரணி ,ராஜலட்சுமி, பூமலர், பன்னை கருப்பையா,சங்கர் ,வார்டு செயலாளர்கள் அண்டாகலுசிவலிங்கம், செல்வேந்திரன், சடையப்பன், முத்துக்கிருஷ்ணன், ,நாராயணசாமி, பாண்டியன், ஜோதிமணி, லிங்கதுரை, மாரிமுத்து, தர்மராஜ், மணிகண்டன் , சதீஸ்குமார், சீரனி ரமேஷ், ஆறுமுகம் , சரவணன், முத்துரத்தினம், ராமச்சந்திரபிரபு, பாலாஜி,, முத்துமுருகன், அண்டாநாகராஜ் , சங்கரநாராயணன், ராஜபாண்டி, அருண்குமார், சுப்பிரமணியன், ராமசுந்தரம் மற்றும் நிர்வாகிகளும் ,ஏராளமான தொண்டர்களும் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் கீழடி அகழ் வைப்பக கட்டிட பணிகள் தொடர்பாக நேற்று அரசு முதன்மை செயலாளர் சந்திரமோகன் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அருகில் கலெக்டர் மதுசூதன்ரெட்டி, தொல்லியல் துறை ஆணையர் சிவானந்தம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# சென்னை தோல் கண்காட்சியில் போர்ட் போலியோ அறிமுகம்

**சென்னை, பிப். 04-**

சிறப்பு இரசாயனங்கள் நிறுவனமான லான்எக்ஸ், பிப்ரவரி 1 முதல் 3 வரை, இந்தியாவில், சென்னையில் நடைபெறவுள்ள இந்திய சர்வதேச தோல் கண்காட்சியில் தோல் தொழிலுக்கான பிரத்யேக பூஞ்சைக் கொல்லிகளின் போர்ட் போலியோவை அறிமுகம் செய்யவுள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய லான் எக்ஸ் இந்தியாவின் வணிகப் பிரிவிக் பொருள் பாதுகாப்பு தயாரிப்புகளின் தலைவர் ஆனந்த் முத்துரெட்டி, கடுமையான போட்டி நிலவும் இந்திய சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய லான் எக்ஸ் தொடர்ந்து தரமான தயாரிப்புகளை தயாரித்து வருகிறது. பல ஆண்டுகளாக, நாங்கள் எங்கள் முயற்சிகளை ஒருமுகப்படுத்தி, தொழில்துறைக்கு நிலையான தீர்வுகளை வழங்குவதில் உணர்வு பூர்வமாக முதலீடு செய்துள்ளோம். மேலும் எங்கள் வாடிக்கையாளர் நோக்குநிலையை முதன்மையான முன்னுரிமையாக எப்போதும் வைத்திருப்போம் என்று கூறினார்.

இந்த செயலில் உள்ள பொருட்களின் கூடுதல் நன்மை, முக்கியமாக மேற்பரப்பைப் பாதுகாக்கும் எலக்ட்ரோபிலிக் செயலில் உள்ள பொருட்களைப் போலல்லாமல், அவற்றின் குறுக்குவெட்டுக்குள் ஊடுருவக்கூடிய திறன் ஆகும். இது தோல் இடைநிலைப் பொருட்களைப் பிரித்த பின்னரும் கூடுதலான பாதுகாப்பை அளிக்கிறது. சவ்வு செயலில் உள்ள உயிர்க்கொல்லிகள் இந்த ஆபத்தை குறைத்து தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு அதிக பாதுகாப்பை அளிக்கின்றன.

# வரிச் சலுகைகளுக்கு காப்பீட்டு தயாரிப்புகளில் முதலீடு செய்யுங்கள்

**சென்னை, பிப். 04-**

வரி செலுத்தும் மக்கள் தங்களின் வரிச் சலுகைகளை சரியான திட்டமிடுதலுடன் செயல்படுத்த சிறந்த வழிகளைத் தேடுவதற்கான சரியான நேரமிது. உங்கள் நிதி நிலைமையை மதிப்பாய்வு செய்வதும், உங்கள் வரிப் பொறுப்பைக் குறைப்பதற்கும் சரியான நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்களா என்பதைப் பார்க்க உங்கள் முதலீடுகளை மதிப்பீடு செய்வது அவசியம்.

பாலிசிபஜார் நிறுவனத்தின் தலைவர் விவேக் ஜெயின் கூறுகையில், முதலீட்டின் முதன்மை நோக்கம் சேமிப்பை அதிகப்படுத்துவது, நிதி ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டும், அதனால் தான், கடைசி நிமிடம் வரை காத்திருப்பதை விட, வரி சேமிப்பு முடிவுகளை முன்கூட்டியே எடுப்பது நல்லது. வரியைச் சேமிக்க மிகவும் விரும்பப்படும் விருப்பங்களில் ஒன்று காப்பீட்டுத் தயாரிப்புகளில் முதலீடு செய்வது. அவை நிதிப் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பது மட்டுமல்லாமல், பெரும் வரிச் சலுகைகளையும் வழங்குகின்றன.

வரி இல்லாத வருமானத்திற்கான மற்றொரு பாலிசி யூனிட் லிங்க்டு இன்வெஸ்ட்மென்ட் பிளான்ஸ் ஆகும். சந்தையுடன் இணைக்கப்பட்ட திட்டமாக இருப்பதால், கடன் மற்றும் ஈக்விட்டி மூலம் குறிப்பிடத்தக்க மூலதன வளர்ச்சியுடன் ஆயுள் காப்பீட்டுத் கவரேஜை ஒருங்கிணைப்பதால், இது புத்திசாலித்தனமான முதலீட்டை உருவாக்குகிறது.

ஹெல்த் இன்சூரன்ஸ் பாலிசி என்பது அனைவருக்கும் ஒரு ஒருங்கிணைந்த திட்டமாகும். ஒருபுறம், நோய் காரணமாக ஏற்படும் மருத்துவச் செலவுகளை இது ஈடு செய்கிறது. மறுபுறம், 1961-ன் வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 80-டி இன் கீழ், பாலிசிதாரர் வரி விலக்கு பெறலாம்.

கண் தானம் செய்வீர்

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# தி பியூபிள் சவீதா ஈகோ பள்ளியில் அறிவியல் வினாடி-வினா நிகழ்ச்சி

**சென்னை, பிப் 04-**

சென்னையில் உள்ள 'தி பியூபிள் சவீதா ஈகோ பள்ளியில் சமீபத்தில் அறிவியல் வினாடி - வினா 2023 நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 25 பள்ளிகளைச் சேர்ந்த 52 ஒஅணிகள் பங்கேற்றன. இந்த வினாடி வினா போட்டியானது 3 சுவாரஸ்யமான மற்றும் புதுமையான சுற்றுகள் மூலம் மாணவர்கள் தங்கள் அறிவியல் அறிவை வளர்த்துக் கொள்ளவும், அறிவியல் கோட்பாடுகளின் பயன்பாடுகளைப் புரிந்துகொள்ளவும் அத்துடன் நடைமுறை மற்றும் தத்துவார்த்த அறிவை வளர்த்துக் கொள்வதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. இதில், சென்னை கேகே நகரில் உள்ள பிஎஸ்பிபி சீனியர் செகண்டரி பள்ளி மாணவர்கள் காயத்ரி கணேஷ், பி ஸ்ருதி மற்றும் ஜே சத்யா ஆகியோர் முதலிடம் பிடித்து 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசை வென்றனர்.

இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தை லால்ஜி ஒமேகா சர்வதேச பள்ளியின் மாணவர்கள் ஐஸ்வர்யா, பரமேஸ்வர், கவுடிக் கண்ணா, சஞ்சீவ், ரோஷன், நிஹால் ஆகியோர் பிடித்து முறையே 15 ஆயிரம் ரூபாய் மற்றும் 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசை வென்றனர். இந்த பரிசு தொகையை வழங்கி தி பியூள் பள்ளியின் இயக்குனர் டாக்டர் சவீதா கூறுகையில், எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கு அறிவியல் கல்வி மிக முக்கியமானது ஆகும். எனவே அடுத்த தலைமுறை விஞ்ஞானிகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்க நாம் புதிய வழிமுறைகளை காண வேண்டும் என்று கூறினார்.

## காணவில்லை

கடந்த 27.01.2023ந் தேதி சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், படமாத்தூர் பேருந்து நிறுத்தம் அருகே வரும்போது கைபையில் இருந்த அசல் ஆவண எண்.609/2001 சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.1 அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணம் தொலைந்துவிட்டது. மேற்படி அசல் ஆவணத்தினை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேதுராமன்
படமாத்தூர்
9698244090

## காணவில்லை

கடந்த 31.1.2023ம் தேதியன்று தேனி மாவட்டம், சிலமலையிலிருந்து போடி நாயக்கனூருக்கு பேருந்தில் சென்ற போது எனது கணவர் ஆண்டிச்சாமி என்ற ஆண்டித்தேவர் பெயரில் போடி நாயக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட 417/1982 (சர்வே எண்.587/2C) 3137/1974 (சர்வே எண்.575/5, 575/6) ஆகிய எண்கள் கொண்ட 2 அசல் ஆவணங்கள் காணாமல் போய்விட்டது. 2 அசல் ஆவணங்களையும் கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட எனது முகவரியில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

A.முருகேஸ்வரி, க/பெ. ஆண்டிச்சாமி,
24/1, பெரியாண்டவர் கோவில் தெரு,
குப்பிநாயக்கன்பட்டி,
போடிநாயக்கனூர். 625 513
செல்:97906 63610

## அசல் நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை

1-1-174,மூப்பர் தெரு,பி.ஆர்.நகர், டி.கல்லுப்பட்டி, பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திரு.முத்துவேட்டை மூப்பர் அவர்களின் மகன் ஆதார் அட்டை எண்.2686 2313 7067,சுமார் 54 வயதுடைய சின்னகருப்பன் ஆகிய நான் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் பேரையூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 1994-ம் ஆண்டு எனது தந்தை, எனது பெயரில் பதிவு செய்து கொடுத்த அசல் உயில் சாசனம் (ஆவணஎண்:9/1994 dt 17.03.1994), கடந்த 24.01.2023-ம் தேதி அன்று மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டி மெயின்ரோட்டில் உள்ள ராஜா ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்கும் போது தொலைந்து விட்டது. யாரேனும் அதைக் கண்டுபிடித்தால் எனது 9342056106 கைபேசி எண்ணுக்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மு.சின்னகருப்பன், த/பெ.முத்துவேட்டை மூப்பர்
1-1-174,மூப்பர் தெரு, பி.ஆர்.நகர், டி.கல்லுப்பட்டி
பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம்.
கைபேசி:9342056106.

## காணவில்லை

கடந்த 08.01.2023ம் தேதியன்று தேனி மாவட்டம், பெரியகுளம் பழைய பேருந்து நிலைய பகுதிக்கு ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது எனது தந்தை முகமது ஹனீப் பெயரில் 3/1972 ( சர்வே எண்.1957) என்ற எண்ணில் பெரியகுளம் இணை சார் பதிவாளர் எண்.2ல் பதியப்பட்ட அசல் ஆவணம் காணாமல் போய்விட்டது. அக்கம் பக்கம் தேடியும் கிடைக்கவில்லை. இது குறித்து ஆன்லைன் மூலம் காவல் துறையில் புகார் செய்யப்பட்டு CNA23012250 என்ற எண்ணில் பதிவாகியுள்ளது. அசல் ஆவணத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட எனது முகவரியில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.அப்துல்சமது, த/பெ. A. முகமது ஹனீப்,
கோட்டை மேட்டு தண்ணீர்துறை தெரு,
வடகரை, பெரியகுளம். 625 601.
தேனி மாவட்டம். செல் : 94430 33971

## அருப்புக்கோட்டை நகராட்சி

**15வது நிதிக்குழு மான்யம் (15th CFC) 2021 - 22**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

அருப்புக்கோட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் (15th CFC) 2021 - 2022 திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு Mini Excavator வாங்கும் பணி | 26,00,000/- |
| 2. | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் லாரி வாங்கும் பணி | 32,00,000/- |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை 03.02.2023 முதல் 13.02.2023 மாலை 3.00 மணி வரை http://tntender.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். இந்த இணைய தள முகவரிகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளிக்கு முன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம் | : | 07.02.2023 காலை 11.00 மணி நகராட்சி அலுவலகம், அருப்புக்கோட்டை நகராட்சி |
| ஒப்பந்தப்புள்ளி நமூனா இறக்கம் செய்தல் (Online) | : | 03.02.2023 முதல் 13.02.2023 மாலை 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளிக்கான வரைவோலை சமர்ப்பித்தல் (Offline) | : | 13.02.2023 திங்கள் கிழமை மாலை 3.00 மணி வரை |
| தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கும் நேரம் | : | 13.02.2023 திங்கள் கிழமை மாலை 3.30 மணி |

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

நாள்: 01.02.2023
இடம்: அருப்புக்கோட்டை

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி

வெ.ஆ.எண். 241/செமதொஅ/2023 நாள்: 03.02.2023

---

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு வெள்ளரிபட்டி, மேலூர்)
அதிமு எண்: 818/2023/அ3

M.அமுதா, W/o. மணிமாறன்,
137, உப்போடைபட்டி,
கிடாரிப்பட்டி கிராமம்,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
...மனுதார்

//எதிரிடை //

உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்

மனுதாரர் M.அமுதா என்பவரின் மாமனார் வீரணன் 10.02.2002 ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கிடாரிப்பட்டி கிராமம், உப்போடைப்பட்டி கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை கிடாரிப்பட்டி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளோம். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு வெள்ளரிப்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

M.அமுதா
மனுதாரர்

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்
ந.க.எண்.9152/2022/ஆ6
இ.ப.வ.எண்.186/2022

ராஜேந்திரன், த/பெ. கணேசன்,
V. கூத்தம்பட்டி,
வடக்கு தெரு, வீரக்கல் போஸ்ட்,
ஆத்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...... மனுதாரர்

//எதிர்/

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் திண்டுக்கல்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதார் தாயார் செல்லம்மாள் என்பவர் கடந்த 09.05.1985ம் தேதி ஷை முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை ஏதும் இருப்பின் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் 15 தினங்களுக்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

---

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்/ வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் பரமக்குடி.
ந.க.பி 6/8752/2022

காளிதாஸ் த/பெ கோவிந்தன்
1/247 A கிழக்குத்தெரு
செம்பொன்குடி முதுகுளத்தூர்
வட்டம் இராமநாதபுரம் மாவட்டம்
(எதிர்)
வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், பரமக்குடி.
---------- எதிர்மனுதார்

அறிவிப்பு

ஷை மனுதாராகிய நான் எனது சகோதரர் மகேந்திரன் கடந்த 23.12.2017-ம் தேதியன்று முதுகுளத்தூர் வட்டம், செம்பொன்குடி கிராமத்தில் இறந்ததை பதிவு செய்ய உத்தரவிட வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன்.எனது சகோதரர் இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன்.மேற்படி மனு மீதான விசாரணை ஷை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் அலுவலகம் பரமக்குடி முன்பாக விசாரணைக்கான வாய்தா வரும் 16.02.2023 -ம் தேதியன்று நடைபெறுகிறது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு ஷை நடுவர் முன்பு ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ளலாம்.

காளிதாஸ்
மனுதார்

## மறுப்பு அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கொழுந்துரை கிராமத்தில் வசித்து வரும் லேட். முகம்மது அலி மகன் செய்யது அப்தாஹீர் அவர்கள் எங்களுக்கு கொடுத்த உரிய தகவலின் படி தாங்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம், அரசு மருத்துவமனை ரோடு, அன்னை கண் மருத்துவமனை எதிரில் அலுவலகம் வைத்திருக்கும் வழக்கறிஞர்கள் எஸ்.அர்சத்உசேன்,B.Sc., B.L., கே.அன்புசெழியன், B.A., B.L., எஸ்.முத்துராமலிங்கம் B.A., B.L., எம்.ஏ.அன்வர்கான் B.A., B.L., J.சுரேஷ் M.Com., B.L., கே.ஏ.ஹீமாயூன் பூட்டோ B.A., B.L., எம்.இராஜம்மாள் B.Sc., B.L., எஸ். அஹமதுயாஸீன் B.A., B.L., T.அஜீத்ராஜ், B.E., B.L., ஆகிய தாங்களுக்கு கொடுக்கப்படும் மறுப்பு அறிவிப்பு யாதெனில்,

தாங்கள் கடந்த 21.01.2023-ம் தேதி தினத்தந்தி தினசரி நாளிதழில் வந்த பொது அறிவிப்பு முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. கடந்த 14.12.2022-ம் தேதி உடன்படிக்கை எதுவும் எமது கட்சிக்காரர்கள் எழுதிக்கொடுக்கவில்லை. அதன் பெரில் ரூ.14,00,000/- பேசி ரூ.7,00,000/- அட்வான்ஸ் தொகை பெற்றுக்கொண்டதக சொல்வது அப்பட்டமான பொய்யாகும். அதனை தொடர்ந்து ரைஸ்மில் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தியிருப்பதாக சொல்லியிருப்பது தவறு. எமது கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை வேறு நபருக்கு விற்கிரையம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தாங்கள் கட்சிக்காரர் தான் எங்கள் கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை மோசடியாக ஏமாற்றும் நோக்குடன் போலியான ஆவணங்களை உற்பத்தி செய்து, வில்லங்கங்கள் செய்யப்போவதாக தெரியவருகிறது. அவ்வாறு எமது கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை வில்லங்கம் வகையறா செய்யவும், வேறு வகையில் ஆவணங்கள் உற்பத்தி செய்யும் பட்சத்தில் சட்டப்படி தவறாகும் என்பதோடு எமது கட்சிக்காரரை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது. எமது கட்சிக்காரர் பெயரில் உள்ள 16.07.2008-ம் தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை எமது கட்சிக்காரரை சில ரவுடிகள் மூலம் அடித்து துன்புறத்தி மிரட்டி அசல் ஆவணத்தையும் மற்றும் எனது கட்சிக்காரர் வசம் இருந்த சில ஆவணங்களையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். எமது கட்சிக்காரர் பெயரில் 16.07.2008-ம் தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது. எனவே தாவா சொத்து குறித்து ஆவணங்களை உற்பத்தி செய்யக்கூடாது என்றும், எனது கட்சிக்காரரிடம் எடுத்துச் சென்ற அசல் ஆவணத்தை ஒப்படைக்க வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் தங்கள் கட்சிக்காரர் மீது, உரிய நீதிமன்றத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது.

சொத்து விபரம்

இராமநாதபுரம் பதிவு மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், போகலூர் துணைப்பதிவு மாவட்டம், கொழுந்துரை குரூப், கொழுந்துரை கிராமத்தில் பட்டா எண்: 4850, சர்வே எண்: 216/6சி1, புஞ்சை ஏர்ஸ் 0.01.82-ம், சர்வே எண்: 216/17ஏ நஞ்சை ஏர்ஸ் 0.05.20-ம் ஆக மொத்தம் 17.33 செண்டு அளவுள்ள சொத்திற்கு நான்குமால்,
வடக்கு - இப்ராகிம் அம்மாள் சொத்து
தெற்கு - சிக்கந்தர் துல்கருணை வீடும், காலியிடமும்,
கிழக்கு - செய்யதம்மாள் சொத்து
மேற்கு - வெண்ணீர்வாய்க்கால் சாலை

மு.செந்தூர் B.A., B.L.,
S. சிவ கோபால் B.A., B.L.,
L. ஹசன் முகம்மது மூமின் BCS., B.L.,
M.அழகுமுத்து அரியப்பன் B.Sc., B.L.,
S.சப்பான கற்பூரஜோதி B.A., B.L.,
S.அலி அக்பர் B.A., B.L.,
A.அற்புதராஜ் B.A., B.L.,
R.S. ராம்கி B.A., B.L.,
B.ஆதிலிங்கம் B.A., B.L.,
U.செய்யது இப்ராகிம் M.A., B.L.,
S.கற்பகவள்ளி B.A., B.L.,
K.பிரியங்கா B.A., B.L.,
M.விந்தியா B.A., B.L.,
சதக் சாப்பிங் காம்பக்ஸ்,
முதுகுளத்தூர் பேருந்து நிலையம் எதிரில்
முதுகுளத்தூர்-623704. செல்: 9965184826

